செய்தி வெளியீடு எண்: 515 நாள் : 17.10.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் மாபெரும் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடைத்த ஆணையிட்டதன் பேரில், சென்னை மாவட்ட நிர்வாகமும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையும் இணைந்து, எட்டாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் மற்றும் தொழிற்கல்வி படித்தவர்கள் பங்கேற்று பயன்பெறும் வகையில், சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில், மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் இன்று (17.10.2015) நடைபெற்று வருகிறது. இம்முகாமில், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களை சேர்ந்த, 300–க்கும் மேற்பட்ட முன்னணி தொழில் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. இம்முகாமில், வேலையளிப்போர் கோரும் சிறப்பு திறன்களை அறிந்து அதற்கு பயிற்சி அளிக்க ஏதுவாக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும், தொழிற்பயிற்சி அளிக்கும் நிறுவனங்களும் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று வேலை பார்க்க விரும்புவர்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் சேவையும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சுயவேலைவாய்ப்பு குறித்து ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (17.10.2015) கோத்தகிரியில் நடைபெற்ற விழாவில், சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் நடைபெற்றுவரும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாமில் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரைச் சேர்ந்த கீழ்க்கண்ட 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

**1.** செல்வி ஆர். மாலதி, த/பெ. திரு. எஸ்.வி. ரவி, என்பவருக்கு இருங்காட்டுக்கோட்டை பி.எச்.ஏ. இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பயிற்சி பட்டதாரிப் பொறியாளர் (Graduate Engineer Trainee) பணி நியமன ஆணையையும்,

**2.** செல்வி ஆர். டி. இ. பனிவிழி, த/பெ. திரு. டி. எழிலன், என்பவருக்கு ஒரகடம், ராயல் என்ஃபீல்டு நிறுவனத்தில் பயிற்சிப் பட்டயப் பொறியாளர் (Diploma Engineer Trainee) பணி நியமன ஆணையையும்,

**3.** திரு என். ஹயாசுதின், த/பெ. திரு நூர்தின், என்பவருக்கு இருங்காட்டுக்கோட்டை, ஹுண்டாய் மோட்டார்ஸ் நிறுவனத்தில் பயிற்சிப் பட்டயப் பொறியாளர் (Diploma Engineer Trainee) பணி நியமன ஆணையையும்,

4. திரு ஆர். திவாகர், த/பெ. திரு. இராமசந்திரன், என்பவருக்கு இருங்காட்டுக்கோட்டை, பி.எச்.ஏ. இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பயிற்சிப் பட்டதாரிப் பொறியாளர் (Graduate Engineer Trainee)பணி நியமன ஆணையையும்,

**5.** திரு ஆர். கார்த்திகேயன், த/பெ. திரு. ஜி. ராஜ்குமார், என்பவருக்கு ஒரகடம், டயாம்சுலர் ஆட்டோமொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பயிற்சிப் பட்டதாரிப் பொறியாளர் (Graduate Engineer Trainee) பணி நியமன ஆணையையும் வழங்கி வாழ்த்தினார்கள்.

பணி நியமன ஆணையைப் பெற்றுக்கொண்டவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 17.10.2015